## தமிழகத்தில் சுடுகாடுகளை சீரமைத்து 'பசுமை மயான பூமி'களை உருவாக்க வேண்டும் - தலைமைச் செயலர் அறிவுறுத்தல்




**சென்னை:** தமிழகத்தில் மயானங்கள் மற்றும் சுடுகாடுகள் அமைந்துள்ள பகுதி களை சீரமைத்து 'பசுமை மயானபூமி'களாக மாற்றும்படி மாவட்ட ஆட்சியர்களுக்கு தலைமை செயலர் வெ.இறையன்பு அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து ஆட்சியர்களுக்கு அவர் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் உள்ள மயான பூமிகள் மற்றும் சுடுகாடுகளை சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்க வேண்டும், துக்கத்துடன் வரும் பொதுமக்களுக்கு சங்கடம் ஏற்படுத்தக் கூடாது என்பதில் அரசு முனைப்புடன் உள்ளது. எனவே, சுடுகாடுகளை நன்றாகவும், எந்த பிரச்சினையும் இன்றி பராமரிக்க வேண்டும்.

தமிழகத்தின் பல பகுதிகளில் உள்ள மயான பூமிகள் மற்றும் சுடுகாடுகள் சரியாக பராமரிக்கப்படாமலும், அடிப்படை வசதிகள்கூட இல்லாத நிலையிலும் உள்ளன. குறிப்பாக, அதிக அளவில் மரணங்கள் நிகழும் நகரப் பகுதிகளில் இந்த நிலை உள்ளது. எனவே, மயான பூமிகளுக்கு சுற்றுச்சுவர் கட்ட வேண்டும், பூச்செடிகள், மரங்கள் நடுவதுடன் தண்ணீர் வசதி மற்றும் பொதுமக்கள் அமர்வதற்கு கூரையுடன் கூடிய பகுதிகளை அமைத்து பசுமை மயான பூமிகளை உருவாக்க வேண்டும்.

தன்னார்வ சேவை நிறுவனங்கள் மற்றும் பெரு நிறுவனங்களின் சேவைகளை இந்த திட்டத்துக்கு பயன்படுத்தி, வசதிகளை ஏற்படுத்தலாம். இதன்மூலம் மயான பூமிகள் மற்றும் சுடுகாடுகளின் ஒட்டுமொத்த சூழல் மேம்படுவதுடன், பிரிந்த ஆத்மாக்களுடன் அங்கு வரும் பொதுமக்களுக்கும் நிம்மதியாக இருக்கும். எனவே, அனைத்து வசதிகளுடன் கூடிய மாதிரி மயானபூமியை உருவாக்கி, மற்றவர்களும் இதேபோன்று செய்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். இது நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சிகளின் மீதான நன்மதிப்பை உயர்த்தும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சாதி, மத, இன, பொருளாதார பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டு புதிய உறுப்பினர்களை சேர்த்துக்கொள்ள மெட்ராஸ் பார் அசோசியேஷனுக்கு உத்தரவு




**சென்னை:** சாதி, மத, இன, பொருளாதார பாகுபாடுகளுக்கு அப்பாற்பட்டு புதிய உறுப்பினர்களை சேர்த்துக்கொள்ள வேண்டுமென சென்னை உயர் நீதிமன்றத்தில் பாரம்பரியமாக இயங்கி வரும் வழக்கறிஞர்கள் சங்கமான மெட்ராஸ் பார் அசோசியேஷனுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மெட்ராஸ் பார் அசோசியேஷனில் மூத்த வழக்கறிஞர்கள் பலர் உறுப்பினர்களாக இருந்து வருகின்றனர். கடந்த 2012-ம்ஆண்டு இந்த சங்க அலுவலகத்துக்குள் சென்று தண்ணீர் குடிக்கமுயன்ற வழக்கறிஞர் யானை ராஜேந்திரனின் மகன் வழக்கறிஞர் நீல்ரஷனை அங்கிருந்த முன்னாள் சட்டப்பேரவைத் தலைவரும், மூத்த வழக்கறிஞருமான பி.எச்.பாண்டியன் தடுத்ததாக கூறப்படுகிறது.

அதையடுத்து மெட்ராஸ் பார் அசோசியேஷனின் நடவடிக்கைகளை எதிர்த்து வழக்கறிஞர் யானை ராஜேந்திரன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அதேபோல இந்த சங்கத்தில் பழங்குடியின மற்றும் பட்டியலினத்தவர்களை சேர்க்க மறுப்பதாகக் கூறி வழக்கறிஞர் ஏ.மோகன்தாஸூம், தன்னை இந்த சங்கத்தில் சேர்க்கவில்லை எனக் கூறி எஸ்.மகாவீர் சிவாஜியும் இடையீட்டு மனுதாரர்களாக வழக்கு தொடர்ந்திருந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.எம்.சுப்ரமணியம் நேற்று பிறப்பித்துள்ள விரிவான உத்தரவில் கூறியிருப்பதாவது: வழக்கறிஞர்கள் மத்தியில் சாதி, மத, இன, பொருளாதார ரீதியிலான பாகுபாட்டை

ஏற்படுத்தினால் திறமையான வழக்கறிஞர்களை நீதித்துறை இழக்க வேண்டிய துர்பாக்கியம் ஏற்படும். மனுதாரர் யானை ராஜேந்திரனின் மகன் நீல்ரஷன் விபத்தில் இறந்து விட்டார்.

அதேபோல அவரை தண்ணீர் குடிக்க விடாமல் தடுத்த மூத்த வழக்கறிஞர் பி.எச்.பாண்டியனும் இறந்து விட்டார். ஆனால் ஒரு மனிதனுக்கு நடந்த சமூக தீங்குகள் அவர்களின் மரணத்துடன் முடிந்து விடுவது இல்லை. இந்த விவகாரத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. இது இனி வரும் நாட்களிலும் தொடரக் கூடாது.

அனைவரும் சமம் என அரசியலமைப்பு சட்டம் கூறுகிறது. அதைத்தான் சக வழக்கறிஞர்களும் பின்பற்ற வேண்டும். சாதீய ரீதியாகவோ, மத ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ எந்த பாகுபாடும் பார்க்கக்கூடாது. எனவே பாதிக்கப்பட்ட வழக்கறிஞர் யானை ராஜேந்திரனுக்கு இழப்பீடாக ரூ.5 லட்சத்தை மெட்ராஸ் பார் அசோசியேஷன் வழங்க வேண்டும்.

அதேபோல இடையீட்டு மனுதாரர்களான வழக்கறிஞர்கள் ஏ.மோகன்தாஸ், எஸ்.மகாவீர் சிவாஜி ஆகியோரை ஒரு வாரத்தில் சங்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த சங்கம் உயர்நீதிமன்ற வளாகத்துக்குள் செயல்பட்டு வருவதால் மற்ற சங்கங்கள் போல இதையும் வெளியேற்ற வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

**வங்கக்கடலில் கருணாநிதிக்கு பேனா சின்னம் அமைக்க ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி: 30-க்கும் மேற்பட்ட நிபந்தனைகள்**



**சென்னை:** சென்னை மெரினாவில் முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு பேனா வடிவ நினைவுச் சின்னம் அமைக்க 30-க்கும் மேற்பட்ட

நிபந்தனைகளுடன் மத்திய கடற்கரை ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

மெரினாவில் அண்ணா நினைவிட வளாகத்தில் ரூ.39 கோடியில் முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு நினைவிடம் அமைக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. அதன் அருகில் ரூ.81 கோடி மதிப்பில் வங்கக்கடலில் பேனா வடிவ நினைவுச்சின்னம் அமைக்க தமிழக அரசு முடிவெடுத்தது.

இந்த நினைவிடத்துக்கு மாநில கடற்கரை மண்டல மேலாண்மை குழுமம் அனுமதியளித்த நிலையில், மத்திய அரசின் கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதலுக்காக அரசு சார்பில் விண்ணப்பிக்கப்பட்டது. மக்களிடம் கருத்து கேட்டு, அந்த அறிக்கையும் அனுப்பப்பட்டது.

இதை ஆய்வு செய்த கடற்கரை ஒழுங்குமுறை ஆணையம், பேனா நினைவுச் சின்னம் அமைக்க அனுமதி வழங்கியுள்ளது.

இதுகுறித்து தமிழக பொதுப்பணித் துறைக்கு மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சகம் எழுதியுள்ள கடிதத்தில். 'தமிழ்நாடு கடற்கரை மண்டல மேலாண்மை குழுமத்தின் பரிந்துரை மற்றும் மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அனுப்பிய திட்ட அறிக்கை, வல்லுநர் மதிப்பீட்டு குழுவின் பரிந்துரைகள் ஆகியவற்றை ஏற்று, வங்கக்கடலில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பேனா நினைவுச் சின்னத்தை தமிழக அரசின் பொதுப்பணித் துறை அமைப்பதற்கு கடற்கரை ஒழுங்குமுறை ஆணையத்தின் நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்படுகிறது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆமைகள் வளை அமைந்துள்ள பகுதிகளில் அவை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் ஜனவரி முதல் ஏப்ரல் 30-ம் தேதி வரை கட்டுமானப் பணிகள் நடைபெறக் கூடாது.
கட்டுமானப் பணிகளுக்கு ஆணையத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரும் பகுதியில் இருந்து நிலத்தடி நீர் எடுக்கக்கூடாது என்பது உட்பட 30-க்கும் மேற்பட்ட நிபந்தனைகளை கடற்கரை ஒழுங்குமுறை ஆணையம் விதித்துள்ளது.

தேவைப்படும்போது, மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் கூடுதல் கட்டுப்பாடுகளை விதிக்க உரிமை உண்டு. கட்டுப்பாடுகள் மீறப்பட்டாலோ, திருப்திகரமாக இல்லாவிட்டாலோ இந்த அனுமதியை திரும்ப பெறவோ, நிறுத்தி வைக்கவோ அமைச்சகம் நடவடிக்கை எடுக்கும்.

இந்த அனுமதியை எதிர்த்து தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் 30 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்வதற்கும் அனுமதி உண்டு. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கல்வி துறையில் செயற்கை நுண்ணறிவு முக்கிய பங்கு வகிக்கும்: ஜி-20 மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி கருத்து**



**புனே:** கல்வித் துறையில் செயற்கை நுண்ணறிவு முக்கிய பங்கு வகிக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு இறுதியில் ஜி-20 அமைப்புக்கு இந்தியா தலைமை ஏற்றது. இதைத் தொடர்ந்து இந்த அமைப்பு தொடர்பான மாநாடுகள் நாடு முழுவதும் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதன்படி மகாராஷ்டிராவின் புனே நகரில் ஜி-20 உறுப்பு நாடுகளின் கல்வி அமைச்சர்கள் மாநாடு நேற்று நடைபெற்றது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக பேசியதாவது: மனித குல நாகரிகத்தின் அஸ்திவாரம் கல்வி ஆகும். அந்த வகையில் நாட்டின் வளர்ச்சி, அமைதி, வளமான எதிர்காலத்துக்கு அந்தந்த நாடுகளின் கல்வி அமைச்சர்கள் வழிகாட்டிகளாக விளங்குகின்றனர். உண்மையான அறிவு, பணிவை கற்றுத் தருகிறது. பணிவில் இருந்து தகுதி பிறக்கிறது. தகுதியில் இருந்து ஒருவருக்கு செல்வம் கிடைக்கிறது. செல்வம் இருக்கும் ஒருவர், மக்களுக்கு நன்மைகளை செய்கிறார். இதுவே மனநிறைவைத் தருகிறது.

இதை கருத்தில் கொண்டு இந்தியாவில் வரும் 2030-ம் ஆண்டுக்குள் அனைவருக்கும் அடிப்படை கல்வியறிவை வழங்க இலக்கு நிர்ணயித்து உள்ளோம். இந்த இலக்கை எட்ட தொழில்நுட்பங்களை முழுமையாக பயன்படுத்தி வருகிறோம். இந்திய மாணவ, மாணவியருக்கு தரமான கல்வியை வழங்க வேண்டும் என்பது எங்களது லட்சியம். அதற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம். 9-ம் வகுப்பு முதல் முதுகலை பட்டம்

பயிலும் மாணவர்களுக்காக டிஜிட்டல் வாயிலாக அனைத்து படிப்புகளையும் போதித்து வருகிறோம். இதன்மூலம் நாட்டின் குக்கிராமங்களில் வசிக்கும் மாணவ, மாணவியரும் தரமான கல்வியைப் பெற முடிகிறது. இந்த திட்டத்தின் 3.4 கோடி மாணவ, மாணவியர் பலன் அடைந்து வருகின்றனர்.

தீக்சா கல்வி திட்டத்தின் கீழ் கிராமப்புற மாணவர்களுக்கு தொலைநிலை வாயிலாக கல்வி வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தில் 29 இந்திய மொழிகள், 7 வெளிநாட்டு மொழிகள் வாயிலாக கல்வி கற்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த கல்வி நடைமுறை அனுபவங்களை உலக நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள இந்தியா தயாராக உள்ளது.

எதிர்காலத்துக்கு ஏற்ற வகையில் இளைஞர்களை தயார்படுத்த அவர்களின் திறன்களை தொடர்ந்து மேம்படுத்தி கொண்டே இருக்க வேண்டும். இதற்காக இந்தியாவில் இளைஞர்களின் திறன்களை கண்டறிந்து மேம்படுத்த ‘ஸ்கில் மேப்பிங்' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தை உலகளாவிய அளவில் கொண்டு செல்ல ஜி-20 நாடுகள் முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

டிஜிட்டல் தொழில்நுட்பம் கல்வித் துறையில் புரட்சியை ஏற்படுத்தி வருகிறது. அடுத்ததாக கல்வித் துறையில் செயற்கை நுண்ணறிவு மிக முக்கிய பங்கு வகிக்கும். இந்த செயற்கை நுண்ணறிவால் பல்வேறு சாதகங்கள் இருந்தாலும் சில பாதகங்களும் இருப்பதாக நிபுணர்கள் எச்சரிக்கின்றனர். இந்த சவாலை எதிர்கொள்ள ஜி-20 நாடுகள் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியம். இந்தியாவில் ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

**அருணாச்சலை இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக அங்கீகரிக்கும் தீர்மானத்தை பரிசீலிக்க அமெரிக்க செனட் குழு முடிவு**

சீன எல்லையை ஒட்டிய அருணாச்சலப் பிரதேச பகுதியில் பயிற்சி மேற்கொள்ளும் இந்திய ராணுவ வீரர்கள் | கோப்புப் படம்

**வாஷிங்டன்:** அருணாச்சலப் பிரதேசத்தை இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக அங்கீகரிக்கும் தீர்மானத்தை பரிசீலிக்க அமெரிக்க செனட் குழு முடிவு செய்துள்ளது.

மூன்று நாள் பயணமாக பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா சென்றுள்ள நிலையில், அருணாச்சலப் பிரதேசத்தை இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாக அங்கீகரிக்கும் தீர்மானத்தை இன்று (ஜூன் 21) பரிசீலிக்க அமெரிக்க செனட் குழு முடிவு செய்துள்ளது. இந்திய - சீன எல்லையில் உள்ள உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு (LAC) பகுதியை மாற்ற சீனா, ராணுவ பலத்தைப் பயன்படுத்துவது, ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபடுவது உள்ளிட்டவற்றை இந்தத் தீர்மானம் கண்டிக்கிறது.

அதோடு, இந்திய எல்லையை ஒட்டிய கிராமங்களில் குடியிருப்புகளை அதிகரிக்கச் செய்வது, கட்டுமானங்களை அதிகரிப்பது, அருணாச்சலப் பிரதேசத்தின் நகரங்கள் மற்றும் முக்கிய இடங்களை மாண்டரின் மொழி பெயர்களுடன் வரைபடங்கள் வெளியிடுவது, பூடானை உரிமை கோருவது ஆகிய சீன நடவடிக்கைகளை தீர்மானம் கண்டிக்கிறது.

இந்த தீர்மானம், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த செனட்டர் ஜெஃப் மெர்க்லி மற்றும் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த பில் ஹகெர்டி ஆகியோரால் இந்த ஆண்டு பிப்ரவரியில் அறிமுகப்படுத்தப்பட்டது. சீனாவின் ஆக்கிரமிப்பு மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களில் இருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ள இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளை ஆதரிக்கும் இந்தத் தீர்மானம், அருணாச்சலப் பிரதேசத்தை இந்தியக் குடியரசின் ஒருங்கிணைந்த பகுதியாக அங்கீகரிக்கிறது.

அருணாச்சலப் பிரதேசத்தை ஜங்னான் என்று சீனா குறிப்பிடுகிறது. அருணாச்சலப் பிரதேசத்தை தெற்கு திபெத் என்றும் அந்நாடு கூறுகிறது. அருணாச்சலப் பிரதேசத்துக்கு இந்தியத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் வரும்போதெல்லாம் எதிர்ப்பு தெரிவிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**அமெரிக்க அதிபர் ஜோ பைடனுடன் பிரதமர் மோடி சந்திப்பு - முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்து**



**வாஷிங்டன்:** வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடனை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்துப்பேசினார். அப்போது, அமெரிக்காவின் ஜி.இ.ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் போர் விமான இன்ஜின்களை இந்தியாவில்

தயாரிப்பது, அமெரிக்காவின் அதிநவீன ஆளில்லா விமானங்களை வாங்குவது உள்ளிட்ட முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் அழைப்பை ஏற்று, பிரதமர் நரேந்திர மோடி கடந்த 20-ம் தேதி டெல்லியில் இருந்து சிறப்பு விமானத்தில் அமெரிக்கா சென்றார். நியூயார்க்கில் உள்ள ஐ.நா. சபை வளாகத்தில் 21-ம் தேதி நடந்த யோகா தின விழாவில் பங்கேற்றார். 2-ம் நாளான நேற்று வெள்ளை மாளிகையில் அதிபர் ஜோ பைடனை பிரதமர் நரேந்திர மோடி சந்தித்தார்.

**19 குண்டுகள் முழங்க வரவேற்பு:** அப்போது, பிரதமர் மோடிக்கு 19 குண்டுகள் முழங்க வரவேற்பு அளிக்கப்பட்டது. இரு நாட்டு தேசிய கீதங்களும் இசைக்கப்பட்டன.

மோடியை வரவேற்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் பேசிய போது, ‘‘இன்றைய சூழலில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து பணியாற்றுவது காலத்தின் கட்டாயம். இரண்டும் வலிமையான நாடுகள், நெருங்கிய நட்பு நாடுகள். நாம் இணைந்து எடுக்கும் முடிவுகள் எதிர்காலத்தில் நல்ல பலன்களை தரும்’’ என்றார்.

பிரதமர் மோடி பேசும்போது, ‘‘சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு சாதாரண இந்திய குடிமகனாக அமெரிக்காவுக்கு வந்துள்ளேன். பிரதமரான பிறகும் பலமுறை வந்துள்ளேன். ஆனால், இந்த முறை இந்திய வம்சாவளியினருக்காக வெள்ளை மாளிகை கதவுகள் விசாலமாக திறக்கப்பட்டுள்ளன. வெள்ளை மாளிகையில் எனக்கு அளிக்கப்பட்ட உற்சாக வரவேற்பு 140 கோடி இந்தியர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு’’ என்றார்.

தொடர்ந்து, இரு தலைவர்களும் தனியாக ஆலோசனை நடத்தினர். பிறகு, இரு நாடுகளின் மூத்த அதிகாரிகளுடன் இணைந்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, அமெரிக்காவின் ஜி.இ.ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் போர் விமான இன்ஜின்களை இந்தியாவில் தயாரிக்க ஒப்பந்தம் கையெழுத்தானது.

அமெரிக்காவின் அதிநவீன எம்கியூ-9 பிரிடேட்டர் வகையை சேர்ந்த 31 ஆளில்லா விமானங்களை (ட்ரோன்) வாங்குவது தொடர்பான ஒப்பந்தமும் கையெழுத்தானது. பின்னர், இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்து, ஒப்பந்தங்கள் குறித்து விரிவாக விளக்கம் அளித்தனர்.

**போர் விமான இன்ஜின்:** இந்தியாவில் தயாரிக்கப்படும் தேஜஸ் போர் விமானங்களுக்கு அமெரிக்காவின் ஜி.இ.ஏரோஸ்பேஸ் நிறுவனம் இன்ஜின்களை வழங்கி வருகிறது. இந்த இன்ஜின்கள் இதுவரை அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு, அங்கிருந்து இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. தற்போது ஜி.இ.ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் அதிக திறன்

கொண்ட போர் விமான இன்ஜின்களை இந்தியாவிலேயே தயாரிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஜி.இ.ஏரோஸ்பேஸ் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: இந்திய விமானப் படைக்காக தேஜஸ் போர் விமானங்களை இந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் நிறுவனம் (எச்ஏஎல்) தயாரித்து வருகிறது. இந்த போர் விமானங்களுக்கான எப்-414 ரக இன்ஜின்களை இந்தியாவிலேயே தயாரிப்பது தொடர்பாக எச்ஏஎல் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.

கடந்த 40 ஆண்டுகளாக இந்தியாவுடன் இணைந்து பணியாற்றி வருகிறோம். பெங்களூரு, புனேவில் உள்ள எச்ஏஎல் தொழிற்சாலைகளின் ஆராய்ச்சி திட்டங்களில் ஜி.இ.ஏரோஸ்பேஸ் நிறுவனமும் இணைந்து இருக்கிறது. எச்ஏஎல் நிறுவனத்துக்கு எஃப்-404 ரகத்தை சேர்ந்த 75 இன்ஜின்களை ஏற்கெனவே வழங்கியுள்ளோம். அடுத்தகட்டமாக எஃப்-414 ரகத்தை சேர்ந்த 99 இன்ஜின்கள் வழங்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதில் 8 இன்ஜின்களை ஏற்கெனவே வழங்கிவிட்டோம்.

அடுத்த கட்டமாக எங்கள் நிறுவனம் சார்பில் எஃப்-414 ஐஎன்எஸ்-6 என்ற ரகத்தை சேர்ந்த அதிநவீன இன்ஜின்களை தயாரித்து சோதனை செய்து வருகிறோம். இந்த இன்ஜின் தயாரிப்பிலும் இந்திய அரசுடன் இணைந்து செயல்படுவோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**இஸ்ரோ - நாசா ஒப்பந்தம்:** அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் நட்பு நாடுகளுடன் இணைந்து ஆர்டிமிஸ் என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதில் 10 ஐரோப்பிய நாடுகள், 7 ஆசிய நாடுகள், 3 வட அமெரிக்க நாடுகள், 2 ஆப்பிரிக்க நாடுகள், 2 தென்அமெரிக்க நாடுகள் உட்பட மொத்தம் 25 நாடுகள் நாசாவுடன் ஒப்பந்தம் செய்துள்ளன.

இந்த வரிசையில், பிரதமர் மோடியின் அமெரிக்க பயணத்தின்போது, இந்தியாவின் இஸ்ரோ மற்றும் அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் இடையே ஆர்டிமிஸ் ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி, நிலவுக்கு மனிதர்களை அனுப்புவது தொடர்பான ஆராய்ச்சியில் இஸ்ரோவும், நாசாவும் இணைந்து செயல்படும். ஆர்டிமிஸ் திட்டத்தின் அடுத்த கட்டமாக, செவ்வாய் கிரகத்துக்கு மனிதர்களை அனுப்பும் ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்படும் என்று நாசா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.